# நீலகேசி

## புத்த வாதம்

<u>செய்யுள்</u>

463 அணிநா டிவைதா மறல்யா றிவைதாம்
பிணிநா டிவைதாம் பெருங்கா டிவைதாம்
மணிமா மலைதா மெனவே வருவாள்
அணியார் சுகதன் நகரெய் தினளே.

464 அறையும் கடலும் அரவக் குரலும்
பறையின் னொலியும் படுகண் டிகையுஞ்
சிறையின் மிகுமா லிதுசெம் படர்கள்
இறைவன் னுறையு மிடமா மெனலும்.

465 மழைசேர் நகரம் மலைபோன் றனவே
கழைசேர் கொடியுங் கதலிவ் வனமே
விழைதா ரவரும் விரிகோ தையரும்
முழைவாழ் புலியே மயிலே மொழியின்.

466 நெடுவெண் டிரைமே னிமிருந் திமிலுங்
கடுவெஞ் செலவின் னுலவுங் கலனும்
படுவண் டறையும் பொழிலும் மெழிலார்
மடுவுந் திடரும் மணல்வார் புறவும்

467 கயன்மீ னிரியக் கழுநீர் விரியும்
வயன்மாண் புடைய வளமைத் தெனவும்
முயன்மீ னெறியு முறியுங் கறியா
தயன்மே யுறையா தணியிற் றெனவும்.

468 கழுகின் னினமும் கழுதின் னினமும்
முழுதும் மறுவை பலமு டினரும்
கொழுதின் னிணனும் பிணனுங் குலவி
இழுதென் னெலும்பா ரிடுகா டெனவும்.

469 சாதியே மிக்க தடுமாற்ற வெந்துயர
மோதியே வைத்தாரவ் வோத்தெலா மீக்கிடந்த
வீதியே காணலா மென்றாளா னின்றாரும்
போதியா ரீண்டைப் புலால்பழியா ரென்றலும்.

470 அங்காடிப் பண்டவூன்றின்ன வறமுரைத்தார்க்
கிங்காடி வாழ்வனவுமுனாய்வந் தீண்டியவாற்
கொங்காடத் தேனறையுங்கொய்ம்மருதம் பூவணிந்த
பொங்காடை போர்த்தார்க்குப்பொல்லாதே யென்னீரோ.

471 விலைபடைத்தா ரூன்வேண்ட வவ்விலைதான் வேண்டி
வலைபடைத்தார்க் கெம்முயிரை வைக்கின்றா மின்ன
கொலைபடைத்தா னோகொடிய னென்பனவே போலத்
தலையெடுத்து வாய்திறப்ப தாமிவையோ காணீர்.

472 தன்றார மீந்தான் றனக்குறுதி யாவதனை
யொன்றானும் வேண்டான் பிறர்க்கே யுழந்தானூன்
தின்றானுந் தீவினையைச் சேருமெனச் சொன்னாற்
பொன்றாவாய்ப் பல்விலங்கும் பூமிமேல் வாழாவோ.

473 உரிதா வுணர்ந்தானொன் றோரா துரையான்
பரிவே யிதுவுந்தன் பாலரோ டெல்லா
மெரிதோய் நரகம்பா ழேற்றுவா னேயாம்
பெரிதா மளியன் பெருந்தகைய னேகாண்.

474 கொடைக்கொட்டி விற்பானுங் கொள்வானு மன்றி
யிடைச்செட்டி னாற்பொருளை யெய்துவான் போல
முடைக்கொட்டி முத்துரைத்து மூடிக்கொண் டேகுங்
குடைச்சிட்ட னாருயிர்க்கோர் கூற்றமே கண்டீர்.

475 ஆடுவார் காண்பா ரவரருகே தான்சென்று
தோடுவார்ந் தாலொப்பச் சொல்விரிப்பான் போற்பாவம்
கூடுவார் கூடாதார் கொன்றார்தின் றாரென்னும்
சேடனார்க் காண்டுநா மென்றுதான் சென்றாளே.

476 அணிசெய் கோழரை யரைநிழ லழகனைப் பொருந்தி
மணிக டாம்பல கதிர்விடு மலருடை மணைமேற்
றுணிவு தோற்றினை யெனச்சிலர் துதியொடு தொழுது
பணிய யாதுமோர் பரிவிலன் படம்புதைத் திருந்தான்.

477 ஆத்த னேயெனத் தெளிந்தவ ணமர்ந்திருந் தவர்க்குச்
சூத்தி ரம்மிது வினையமு மிதுவிது பிறிதாஞ்
சாத்தி ரம்மிவை மூன்றென வன்றவத் தோன்றல்
பாத்து ரைக்குந்தன் பதப்பொருள் பலவகைப் படவே.

478 கந்த மைந்திவை கணிகத்த வாமெனக் கரைந்து
முந்தி நாடினோ ருணரவல்ல தில்லையென் றுரைத்தும்
புந்தி யாலங்கோர் புற்கல னுளனெனப் புணர்த்து
மந்தி லாற்சொலாப் பாட்டினோ டியாதுமில் லெனவும்.

479 தத்து வம்மிவை தாமெனத் தமர்களுக் குரைக்கும்
புத்த னார்தம்மை புயலிருங் கூந்தலி பொருந்திப்
பித்தர் போற்பல பிதற்றினீர் பிதற்றிய விவைதா
மெத்தி றத்தினு மிசையின்மை யிசைக்குவ னென்னெவெ

480 ஓதி னீர்சொன்ன கந்தமைந் துளவெனி னுருவே
வேத னையொடு குறிசெய்கை யிலவென விரிப்பும்
போதியா லங்கோர் புற்கல னுளனெனப் புணர்ப்பும்
யாது மின்மையோ டவாச்சிய மறும்பிற வெனவே.

481 ஐந்தில் யான்சொன்ன பலகளு மமைவில வெனினும்
கந்த முண்மைக்கட் கருத்துள தாம்பிற வதனாற்
சிந்த மாயவு முளவெனத் தெளியினி யெனலும்
நந்த னார்க்கற முரைத்திர்நீ ரோவென நக்காள்.

482 இட்ட நீபல வுரைத்தனை யிவற்றுளொன் றொழிய
நட்ட மாயினு நன்மையை நின்வயிற் றருவோய்
குட்ட மேமுழு மெய்யினு மெழுந்தவன குடுமி
தொட்டி யானெனி னுந்துய னோவது மாமோ.

483 நல்ல வேயென நாட்டிய கந்தமிவ் வைந்து
மில்ல வேயெனத் தெருட்டுவ னெடுத்துரை யெனத்தான்
சொல்ல வேதுவ ராடைகண் மூடிய சேடன்
மெல்ல வேயிவை கேளென விரித்தவ னுரைக்கும்.

484 உருவே திரிவே தனையா றுணர்வும்
மருவா தனமாண் குறியத் துணைசெய்
இருவே றவைசெய் கையிரு பதுமாந்
திருவே யிவையெம் பொருடே ரெனவும்.

485 முறைசெப் பியவைந் தினுண்முன் னையுரு
வரையிற் பலவட் டகமுள் ளூறுத்த
விறைபட் டனவெட் டெனவொட் டினகே
ணறையிற் பொலிகோ தைநறுந் நுதலே.

486 நிலநீ ரெரிகாற் றோடுரு விரதந்
நலமா கியநாற் றமொடு றிவைதா
மிலவே யவையெட் டினும்விட் டதிறஞ்
சொலவா முடன்கேட் டொடுதோற் றமுமாம்.

487 வலிதா நிலமை யதுநீர் வெய்துதீக்
கலியே தருகாற் றியக்கம் கருமப்
பொலிவேற் பொறையயர்த் தல்புலர்த் துளர்த்தன்
மலிபூ தங்கணான் கின்மாண் பின்னவையே.

488 இனிவே தனையா வனவின் படுமொடு
துனிவே தருதுன் பமு மா மிடையுன்
நனிதா நலதீ வினையன் மையினாம்
பனிவே யிணைபன் னியதோண் மடவாய்.

489 அறிவா வனதா மினியா வெனினைம்
பொறியோ டுமனம் மிவைபுல் லினவேற்
குறிதா மிவையா றினுங்கூறுவதென்
னெறியா மிவைநீ லநிகர்த் தகணாய்.

490 குயலா குயலம் மெனக்கூ றும்வினைப்
பயனாற் பலபா கெனப்பட் டவைதா
மயலா மனமே வசிகா யத்தினா
மயலா ரிதாவை மினியா ரறிவார்.

491 கடனா கியகந் தமிவைந் துகளும்
உடனே யவைதோன் றியொரு கணத்துட்
கெடுமே யவைகேட் டினும்வாட் கணல்லாய்
சுடர்மே யசுடர்ந் நுதிபோன் மெனவும்.

492 கவையொப் பனவை விரலைந்து களும்
இவைமிப் படிக்கைப் படியென் றதுபோ
லவையப் படிக்கந் தங்களைந் துகளும்
நவையைப் படுநல் லுயிரா மெனவும்.

493 அவைதா நிலையா துயரா மசுவம்
நவையா ருயிர்நாட் டிலங்காட் டமிலை
யிவைநான் மையென்வாய் மையிவ்வா றுணர்வா
ரெவையே செய்துமெய் துபவீ டுமென்றான்.

494 பல்லியல் பாகிப் பரந்தவைங் கந்தமுங் கந்தங்கடாம்
புல்லிய வொற்றுமை யிற்குறி யாகிய பொய்யுமிருஞ்
சொல்லிய கேட்டவள் வேட்டக் குரம்பை சுடுபவர்போ
லல்லியங் கோதைநின் காட்சி யழித்திடு வேனெனத்தான்.

495 பிண்டம் பிரிவில வேயெனச்சொல்லுத லாலவற்றுக்
குண்டங் கொருகுணி யாங்கவை தாங்குண மாகுமன்றேல்
விண்டங் கவையவை வேறுளதாதலும் வேண்டுமன்றோ
பண்டங்கு நீசொன்ன முட்டியிற்பஞ்சாங் குலிகளும்போல்.

496 பூதன்கும் புகுந்தே தெருல்லலுற் றயவற்றுக்
கேதமி றன்மை கரும மிரண்டா வியைந்தவை
பேதமு மாமென்ற பெற்றியி னாற்பொரு ளிற்றென்றலாற்
சாத மாமுயிர் தன்மையிற் றேற்ற தவறெவனோ

497 நின்சொல்லப் பட்ட வலிப்புந் தரிப்பு நிலத்தினவே
லென்சொல்லப் பட்ட வுணர்வொடு காட்சி யுயிரனவா
முன்சொல்லப் பட்ட நிலந்தா முடியின் முடிவுளதாம்
பின்சொல்லப் பட்ட வுயிரும் பெரிய பிரச்சையினாய்.

498 வற்பமல் லானில மில்லெனச் சொல்லுவ னாங்கதுபோற்
பொற்ப மிலாவுயிர் தானுமில் புத்திய லாலெனலும்
வற்பமலா நிலமன்னுந் தரிக்குமென் பாயல்லையோ
கற்பமெல் லாம்பிறர்க் கேநின் றுழந்த கருணையினாய்.

499 உரிய வலிமையல் லானில மோரல னென்றிருந்தாற்
பெரிய நிலத்தை யறிவிக்கும் பெற்றியில் லாய்பெரிது
மரிய வுயிரை யறிவுறக் காட்டென்றி யெப்பொருளும்
தெரியக் குணமுகத் தாலன்றி யென்றுந் தெருட்டுளதோ.

500 விருத்த நிலைமையும் வேண்டலம் யாமென வேண்டுகின்றீ
ரருத்த மெனக்கொண்ட வட்டகம் யாவையும் விட்டில
றிருத்தமி றீவயி னீருறை திட்ட விரோதமன்றோவாற்
பொருத்தம லாதன வேசொல்லும் புத்தநின் புத்தியிதோ.

501 தன்மை கரும மவற்றன வேயென்ற றானென்னைவே
றின்மை முடியினெ னிட்டமுரைப்பினுங் கெட்டதென்னோ
மன்னுமந் நான்கு மறுதலை தத்தமு ளாதலினா
லென்னு மியல்பும் பயனு மழிக்குமென் பேனல்லனோ?

502 ஊரிது காடிது தானென லென்னை யொருங்குளவே
னீரிது தீயிது தானென லாமோ நிகழ்வுடனே
யாரிவை கேட்டறி வாரவை யட்டக மென்னினலாற்
பேரிது வேயெனச் சொ;லுத றானும் பிழைக்குங்கொலோ.

503 தொக்கவை யாயுட னேயவைநிற்பினு மாங்க வற்றுண்
மிக்கத னாற்பெயர் சொல்லுவன்யானென்று வேண்டுதியேற்
புக்கன தாம்பொறி யானின்புலமன்றிப் பொய்யெனத்தா
னக்கனர் சாக வெனுநீயுரைக்கு நயங்க ளென்றாள்.

504 உருவுடை யட்டக மன்றியுமைந்தினுட் பட்டவெல்லாம்
மருவொடு கூடியுந் தீண்டியுமாக்குந் திறமரிதான்
மருவுடை யார்களை மாயங்கள்சொல்லி மருட்டியண்ணுந்
திருவுடை யாயவ காயத்துத்தேரை யடித்தெருட்டாய்.

505 திரிவே தனைகளுந் தீராநுமக்குள வாதலன்றே
கரிவே தனையவர் காமுறுகாமங் கடிந்ததுதான்
பரிவே பெரிதுடை யீர்முன்னுரைத்தபல் செய்கைகளின்
விரிவே யவையோரின் வேதனைவேறில்லை யாம்பிறவே.

506 உணர்ச்சியி னாற்செய்கை யாக்கியச்செய்கையி னாலுழப்பாம்
உணர்ச்சியி னாங்கோர் பொருட்சுவடுள்ளது போல்கின்றதா
லுணர்ச்சியொ டல்லன வொன்றொன்றில்நோக்கில வாமெனினு
மிணர்ச்சி யிழந்து பிறபிறவாகிப் பெறலிலவே

507 ஆறினி னொறே நிகழும்பொழுதினல் லாவுணர்வு
தேறின வாறவற் றுண்மையெனக்குத் தெருட்டனலிந்
தாறின வோவில்ல தாழ்ச்சியினாலுள தாமெனினீ
கூறிய வாற்றா லுயிருண்மைகூறலுங் குற்றமென்னோ.

508 ஒருணர் வுள்ள பொழுதினொழிந்த வுணர்வுகடம்
பேரு முணரப் படாமைபெற்றாமென்னும் பேச்சுமுண்டா
லீருணர் வில்லை யிருமுன்றொருங்குள வென்றுரைக்கு
மோருணர் வேயுடை யீர்சொற்களொன்றொன் றழிப்பனவே.

509 ஒன்றே யுணர்வாய் நிகழற்குக்காரண மவ்வுணர்வாய்
நின்றே யறிவான் றனிமையினாலெனத் தேரினிநீ
யன்றே யெனினவை யாறுந்தமுண்மையின் வேறென்னலாற்
சென்றே புலந்தலைப் பெய்தலறிவுடன் சீர்க்குமன்றே.

510 இச்சையில் லாமையி னெல்லாமொருங்குண ராவெனினு
மிச்சையெல் லாத்திற்கும் வேறேலொருங்குட னெய்துமன்றி
யிச்சையெல் லாத்திற்கு மொன்றேற்குணிப்பொரு ளிச்சையென்றாய்
தச்சனஞ் சிச்சா ரகழ்கள்வனென்கின்ற தன்மையினாய்.

511 பிறந்து பிறந்துநி னிச்சைகெடலன்றிப் பின்னொன்றின்மேற்
சிறந்து சிறந்தாங் குணர்ச்சிவிரியுந் திறமரிதாற்
கறந்த கறந்த கலஞ்சுவைத்திட்டாற் கறைக்கலங்க
ணிறைந்த நிறைந்தவை பாறயிர்மோரெனத் தானென்னையோ.

512 எல்லா வுணர்ச்சியு மிச்சைவழியா லெழுமெனலா
லில்லாம் பிறநுன திச்சையுமிச்சைமு னின்மையினால்
வல்லா யிதற்குமுண் டாயின்வரம்பின்மை யாமதனாற்
சொல்லா விடுந்திற மென்னோவிரிவிற்குச் சூனியமே.

513 வெளிப்பட்டு நின்றதொன் றன்றியொழிந்தவிஞ் ஞானங்கடாங்
குளித்தன தாங்கொள்ளப் பாடின்மையாலின்மை கூறிநின்றேற்
களித்தவை தங்களுக் காலயமாலய மாமெனநீ
யொளித்தனை கொள்ளலுற் றாயுயிர்தன்னையோர் பேருரைத்தே.

514 இருளுடை மாலைக்கண் டோன்றாதெனக்கென நண்பகலே
பொருளுடை யார்பொருள் கொள்வானகழுநன் போன்றிலையோ
வருளுடை யார்சொல்லு மாருயிராலய மென்றிருக்கும்
மருளுடை யாய்நின் மாண்பழிந்தெற்றான் மயங்கினையோ.

515 மூக்கொடு நாமெய்யும் மூன்றுந்தம்மூன்று புலன்களையும்
தாக்கிய போழ்தே யறிதலுந்தத்துவ மாமென்றியா
லாக்கிய மூன்றி லறிவுமருவா லவையொருவாப்
பாக்கியஞ் செய்தாய் பரிசங்கள்கொள்ளும் பரிசென்னையோ.

516 உற்றில வாயொலி கொள்ளுஞ்செவியென வோதுகின்றாய்
கற்றிலை மெய்ம்மைநீ கட்புலந்தன்னோடோர் காலத்தினாற்
பெற்றில நாமதன் பின்கொளறானும் பெருந்தவத்தாய்
மற்றிது தான்றன் பொறியுறுகாறும் வரலினன்றே.

517 வாய்த்துரை யீதென வாமனிதுசொல்லும் வந்துறுமேற்
சேய்த்தெனக் கோடலுஞ் சேராதொலிசெவிக் கண்ணதெனி
னீத்தன தாமல வாயினுநீசொல்லு முற்றறிவின்
றீத்தனைப் போலவுந் தேறென்றவனைத் தெருட்டினளே.

518 பெற்ற வெழுத்தேற் பிரிவின்கணாறாம் பெயர் நுனது
முற்ற வுணர்ந்து முடித்துரையென்னை முதலெழுத்துப்
பற்றின சித்தம் பலவுணர்ந்தேயவை பாழ்படலாற்
கற்றினி யெல்லாக் கணக்குங்கலந்துரை காண்பென்னையோ.

519 ஓதிய கந்தங்க ளொற்றுமையாலுயி ரென்றதுபோற்
போதிய னாய்நின்னைப் புத்தனென்றாலது பொய்பிறவோ
வாதியி னாம்புத்தி யாவதல்லாலந்தத் தன்களையா
நீதியி னாற்சொல்லி நின்றுநின்பேறு முணர்விலையே.

520 அன்றியு நின்சொ லறிபொருடானில வாதலினா
லொன்றி யுரைத்த வுனக்குமெனைத்து முணர்வருமை
யென்றினி யாமுந் தெளிந்தோமிதனா லெனவுரைத்தாள்
வென்றி யுடையன வல்லதுசொல்லா விரிகுழலே.

521 ஆறுகுறி யாவனவு மாயுலந் தாமும்
கூறுகுறி மாறுமவை கொள்ளும்வகை தாமும்
மாறுகுறி மாறிக்குறி யென்றுமயக் காதே
வேறுகுறி தாமுணர்வின் விள்ளுவ லினிக்கேள.

522 கண்ணின்குறி மூக்கின்குறி மெய்யின்குறி செவியி
னண்ணுங்குறி நாவின்குறி காடின் மனத்தோடு
மெண்ணுங்குறி யாவனவிவ் வாறுமெனக் கொண்ணீ
பண்ணின்குறி யேசுமொழிப் பாவையெனச் சொல்லும்.

523 அறிவுகுறி யென்பனவி னாயுல மொன்றே
லறிவுகுறி யென்பனவு மாகுமவை யொன்றே
பிறிதுகொளு புலமுள்ள தாகுமெனிற் பேதம்
சிறிதுநெறி காட்டினது செல்லுமெனச் சொல்லும்.

524 உண்மைகுறி கொள்ளுமுணர் வின்புலம தெய்தா
தெண்ணினுணர் வோடுகுறி யிவ்வகைய வென்னி
லுண்மையுணர் வின்புலமோ டொன்றெனில தொன்றே
நண்ணலில வேலுணர்வி னாயுல னின்றே.

525 ஒருங்குகுறி யோடுணர்வுதோன்றியுடன் கொள்க
வொருங்குபுலந் தோன்றியவையொத்தகெட லானா
லொருங்குகுறி யோடுணர்வுதோன்றலில வாமே
லொருங்குபுலந் தோன்றுதலினொன்றுமுணர் வில்லை.

526 உள்ளுஞ் சொல்லுடம் பென்றிவை மூன்றினாற்
கொள்ளு நுங்குச லாகுச லங்கடா
மெள்ளி னேரு மிவையின்மை காட்டுவே
னுள்ளக் காக வுரைத்தவம் மூன்றினுள்.

527 வேண்ட லேயென்றும் வெஃகுத லாயினா
லீண்டி நின்றநி னித்தொடைப் பாடெலாந்
தீண்ட லன்னெனத் தீண்டிய வந்தவோ
வீண்டை யேநிற்ப விஃது மறிகிலை.

528 நன்மை வெஃகுதல் நன்றெனச் சொல்லுலு
மனமை வெஃகுத லன்றெனக் கூறலு
மின்மை யால்வெஃக லென்றதுந் தீமையி
னின்மை யாய நெறிமொழி நீயினி.

529 தீய வாய வெகுளியை யொப்பன
மாய மான முலோப மனத்தன
காய்வு செய்திலை கண்டுநின் கள்ளமே
நீய வையவை நேர்தலி னாம்பிற.

530 காட்சி நல்லன் காண்ட லனைத்தினு
மாட்சி யாமெனின் மன்னுமஃ தொட்டுவேன்
வேட்கை யாலிது நன்றென வேண்டினு
மாட்சி யொட்டி வழித்தன னல்லனோ.

531 பொய்கு றள்ளே கடுஞ்சொற் பயனில்கொ
னைத லில்லன நான்கிவை நாவினாஞ்
செய்கை தீயன வாமெனச் செப்பினீ
ரைய நன்மையென் றீரவற் றப்புடை.

532 மண்டை கெண்டிகை மாட மடாமனை
கொண்டை குண்டிகை கூறை குடங்கடை
யுண்டி கட்டி லுடம்புயி ராதிய
பிண்ட மாய பிறபிற யாவையும்.

533 கூட்ட மான குறியெனி னலதை
பூட்ட லங்கோர் பொருளின்மை வேண்டியு
மீட்டு மீட்டிவை சொல்லின மெய்யுரை
நாட்டு மாறென்கொ லோவிளி நாசநீ.

534 நிலம்பொய் நீர்பொய் நெடுநகர் தாமும்பொய்
கலம்பொய் காற்றொடு தீயும்பொய் காடும்பொய்
குலம்பொய் யேயெனக் கூறுஞ்செங் கூறையாய்
சலம்பொய் யன்றிதொன் றேனுங்கள் சத்தையே.

535 குற்ற மென்ற குறளையே யொப்பன
மற்றுஞ் சால வுளபிற மாண்பில
வொற்றைப் பெண்ணுரை யாடுதல் போகங்கள்
கற்ற லேகடுஞ் சொல்லின்ன காத்தலும்.

536 பையச் சொல்லுத னல்வினைப் பாலென்றா
லெய்யக் குற்ற வெறியப்புணர்க்குங்கால்
வையத் தீயாவரு மந்திர மாமவை
செய்யச் சொல்லுநர் செவ்விய ராபவோ.

537 கடுக்கத் தாமடி கள்ளெனக் காய்வுர்யா
ரொடுக்கச் சாம்பிவை தாலுவப் பாரில்லை
கொடுக்க வென்றல் குசலமன் றென்பதோ
படுக்க லுற்ற பதகநின் பாடமே.

538 ளபாவ மாம்பய னில்லன சொல்லலேற்
பூவ மேபொருள் கைக்கொண்டு புற்கலர்
சாவச் சொல்லுவ தத்துவ மாம்பிற
வேவ னன்றென்றி யொப்பவொன் றில்லையேல்.

539 காயத் தாற்கொலை காமங் களவென
நீயத் தாசொன்ன நேருந் திறமென்னோ
மாயத் தான்மன மின்றி யவையவை
தேயத் தியாருளர் செய்பவை ரென்பவே.

540 வழிமுள் ளூன்றன் மனைசுடன் மாந்தரைக்
குழியு ளூந்துதல் கோயிற் கலஞ்செய்த
லொழிவில் யானைமுன் னோட்டலோ டின்னவும்
பழியும் பாவமு மாக்குவ வல்லவோ.

541 ஒன்றி நின்ற வுயிரை யுயிரிது
வென்று சிந்தித் தழிப்ப னெனவெண்ணி
நன்றி யிஃறொழி றேற்ற நவையினாற்
கொன்ற தேகொலை யென்றைந்திற் கூறினாய்.

542 தேவ னையிவன் றேவ bனனவெண்ணிப்
பாவனையிற் பணியு மனத்தனாய்த்
தூவென மும்மையே தோற்றித் தொழானங்கோர்
தாவ னைதொழு தான்றவ றெய்துமோ.

543 ஒத்த வன்றனை யுறுபகை யேயெனக்
குத்தி னாற்குங் கொலைவினை யில்லைனப்
புத்த னீருரைத் தீரங்கோர் புற்கலன்
செத்த வாறது சிந்திக்கற் பாலதே.

544 கொன்ற பாவமுண் டாயின் குறட்கண்ணும்
ஒன்று மேயென் றுரைப்பனெப் பாரியார்
பொன்றினும் புத்த ரேநீவி; சொல்லின
சென்று சேர்தலைச் சித்தம தின்மையால்.

545 பட்டி லன்பகை யாலெய்து பாவமங்
கொட்டி நீயவ் வுயிர்க்கொலை யாலென்னில்
துட்டனைத் தொழு தோன்றுறந் தானெனக்
கெட்ட னன்னிது கேட்க வினைநிலை.

546 ஆய்ந்த வைந்தினு மாம்வினை யார்ப்பெனின்
வீய்ந்த தின்மையின் வெய்ய வவீசிதான்
காந்தி பாலி யிரங்கக் கலகனைப்
போழ்ந்து கோடல் பொருந்தல தொக்குமே.

547 கொல்வ னென்றவன் கூர்ம்படை குன்றினுஞ்
செல்வ னென்றய லார்மனைச் சேரினுங்
கல்லு வானொ டெல்லார்க்குங் கருவினை
சொல்லு வானோ டுலகமுஞ் சுற்றமே.

548 துப்பி னால்வினை சொல்லலன் யானென்று
வப்பி னார்முலை காய்வது வாமனீ
யிப்ப லாரிடை யென்னையி தென்பதோ
செப்பி னாலுஞ் சிதைகின்ற தில்லையால்.

549 பண்டு தான்வைத்தப் பண்டத்தை யொப்பதொன்
றுண்ட தாயி னதுவது வேயெனக்
கொண்டு போகினுங் கொள்ளினுங் குற்றமில்
கண்ட போழ்துங் களவன்ற தென்றலால்.

550 பஞ்சி மெல்லடி நோவப் பகனடந்
தஞ்சி லோதியு மல்க வவளெனத்
துஞ்சு மில்லுடை யாளைச் சுமந்துபோய்
வஞ்சி யான்கொள்க வாழ்கபுத் தன்னென.

551 கந்த மாவன காகதந் தம்மெனப்
பந்த மின்மையிற் பாழ்செய்திட் டேனினி
யந்தி னீசொன்ன வாரிய சத்தையுஞ்
சிந்தை யுஞ்சிதைப் பேன்சில சொல்லினால்.

552 பிண்டமொன் றாயினும் பிரியநோக் கின்னது
கொண்டுநின் றாம்பிற கூறினைந் தேயெனக்
கண்டநா மெய்ம்மையுங் காட்டுவா யீங்கெனி
னுண்டுதா மாகுல முணர்வுதான் கூறுவோம்.

553 முழுதுந்துன்பம்மென மொழியினஃ தாகிய
பொழுதினா னல்லவும் புல்லுமா மாதலாற்
பழுதுதா னவ்வுரை பன்மைதா னின்மையில்
இழுதையா னான்குள வென்றுசொன் னாயென.

554 உழப்புமுன் றும்முட னொக்கநோக் கின்னது
வழுக்கில்லா வாய்மையேல் வாய்மை சொல்லியினி
யிழுக்கினாய் நீபிறர்க் கின்பமீந் தேனெனல்
பழுக்களே காய்வது ண்டுமுண் டேபிற.

555 துக்கமே யாயினாற் றொழிலுமொன் றாய்ப்பய
மொக்கவே வேண்டுமா லுயர்விலாக் கீழ்க்கதி
புக்குவீழ்ந் தார்பிறர் பொங்கிநின் றாரெமர்
மிக்கதே யென்னெறி யென்றுவேண் டல்லெவன.

556 உறுதிகூ றல்லொழி யொழுக்கங்காத் தல்லொழி
யிறுதியிஃ றுன்பமே யின்பமில் லாயினாற்
சிறிதுநீ தீப்புகாய் சேர்வதென் னைந்நிழல்
இறுதியில் லாத்துய ரின்னசெய் யாயினி.

557 தூய்மை யில்லை முழுவது மென்பதை
வாயும் நீசொல்லும் வாய்மைய தாயினாற்
றாமஞ் சாந்தம் புனைபவர் தாமெலாம்
ஏம நன்னெறி கண்டில ரேபிற.

558 ஓது மோத்து மொழுக்குநின் னுண்டியுங்
கோதில் தூய்மைய வாமெனக் கூறியும்
யாது நீயசு வாமெனச் சொல்லுவாய்
நாத னீபிற நன்கறிந் தாயவை.

559 நீமி னேசொன்ன மெய்ம்மையை நோக்கிலார்
தூய்மை யாம்பிறர் தூய்மை யிலரென்று
காய்ப வேகவி மண்டைகள் என்றனள்
வேயி னன்மை விலக்கிய தோளினாள்.

560 சென்ற சென்றுன செந்நெறி கண்டவர்
பின்றைத் தூய்மை பெறுவது மில்லையே
லின்று மின்று மியல்வது வாக்கொள்வாய்க்
கின்றித் தூய்தன்மை யென்னை யிழைத்ததோ.

561 அழுகு பூசுமி னங்கண மாடுமின்
கழுகு ணூத்தையோ டேனவுங் கவ்வுமின்
மெழுகு மின்னிடை மெச்சிய மல்லதின்
முழுதுந் தூய்தன்மை சொல்லிய மூடர்கள்.

562 நில்லா வென்னி னில்லன்மையாலும் நில்லாவா
யில்லா மென்ற லின்புறு மேற்கோ ளிழுக்காகு
மெல்லாந் தானே யென்றலி னேன் விழவெய்தி
நல்லாய் சொன்ன நான்மையை நாட்டுந் திறமென்னோ.

563 உழுவார் வணிக ரென்றிவ ருள்ளிட்டுலகத்துள்
வழுவார்க் கீய வான்பொருள் வேறாய் மறியும்மே
வழுவார் தமையுங் காண்டுமஃ தாமாறுரையீரோ
புழுவாழ் கென்று புனன்மழை தந்த புகழுள்ளீர்.

564 தெய்வத மென்று தேறினர் செய்யுஞ் சிறப்பென்றும்
கையது வீயக் காமுறு தானக் கலப்பென்று
மெய்தல் ரேயின் னிவையிவை யெல்லா மிழுக்காவோ
மெய்பிளந் திட்டு வேண்டுநர்க் கீயும் விழுமிய்யீர்.

565 ஒள்ளிழை யாரே யுறுபொருள் பிச்சைக் குரியார்கள்
தள்ளின போழ்தின் னவையவை தன்னைத் தலைநிற்பார்
கள்ளர்க ளன்மை காட்டலு மாமோ கருணையாற்
பிள்ளைக ளேங்கப் பிறர்களுக் கீந்த பெருமைய்யீர்.

566 நில்லா தாகக் கூறுத றன்னை நெறியென்றீர்
பல்வகை யானும் பாழ்செய்து பின்னே பரிகாரஞ்
சொல்லுவி ராயிற் சொல்லிய மெய்ம்மை துறவாமன்
கொல்சின வேழங் குறிநிலை செய்த குணத்தின்னீர்.

567 ஓதி யாது முயிரில்லை யென்ப துரைத்து நின்றாயேற்
கோதி லங்கோர் குறியுயிரே கொள்ளி னுங்கோளழிவாம
வேதி லார்சொல் பரிகற்ப னைமி னாலின் மைசொல்லி
னீதி யாநின் கருத்தினா லுண்மை யுந்நேர்ந் தாயன்றோ.

568 ஒன்று மில்லை யுயிரென்றுரைத்தநீ யுண்மை யின்மை
நின்ற வாறே நெறியாகநேர்கின் றாய்நீ யாவனோ
வன்றி முன்சொன் னவத்திறமெத்திறத்தா னும்மா காமையா
லின்றுந் நின்றுந் நீமொழிந்தாயெம்மிறை யேயிறை யாகவே.

569 போற லானு மதுபோ லாதென்றும்பு னைவினாலும்
வேறல் லதில் லையெனவும் வினைவலியும்யோ கின்னாலும்
தேறி நின்ற பொழுதோடிவ்வேழாந்திறத்தி னாலுங்
கூற லாமோ மீட்டுணர்வுகொண்டு ணர்வா னில்லாக்கால்.

570 நாம சீவன் முதலாய நான்மை களின்முன் மூன்றிலுந்
தூய்மை சீவனுடைத்தாகு மன்றே னின்சொன் மாறுமாந்
தாம சீவன் முழுவது மென்று தருக்கு கின்றாய்
வாம சீவ னிவற்றினா லுண்மை மறுக்க லாகுமோ.

571 அறியும் மெய்ம்மை யும்மைங்கந்தம்மாட சிய்யு மல்லவையுஞ்
சிறிதும் மென்முன் னிலையின்மைகாட்டிச் சிதைத்தே னாலினிப்
பிறிதொன் றுண்டே லுரைய்யெனவுரைத்தாள் புத்தன் றான்பெரிதும்
மெறிபட் டென்னெ றியினாலேயடக்கு வன்னி னையுமென்றான்.

572 ஆதி யலாத வகன்றடுமாற்றமுஞ்
சாதி யறுக்குந் தகையு மிவையென
வோதி வினைப்பயத் தொப்புரைப் பார்க்கன்றி
நீதி யிலாநெறி நேரல னென்றாள்.

573 வித்தின் வழிவழித் தோன்றும் முளைகிளை
சத்தியி னாயசந் தானத்தை மாற்றென்பன்
வெத்தவ வித்தினின் வேறன்று வீடிது
தத்துவ மாக்கொ டளிரிய லாயே.

574 வினையு முளது பயனு முளது
தினையனைத் தாயினுஞ் செய்ஞ்ஞன மில்லை
யெனையவுங் கந்த மருகண நில்லா
நினையின்மற் றென்றா னெறிபயந் தானே.

575 குணம்பொரு ளென்றி கொடைபொரு ளென்றி
யுணர்ந்துசெய் துண்பா னொருவனி லென்றி
கணந்தனி லேநிலை கந்தமு மாயக்காற்
பிணங்குவ தொக்குநின் பேரெமக் கென்றாள்.

576 தீதுள்ள மேலது தீயழப் பேசெய்யும்
யாதுள்ள மாண்புள மேலின்ப மாமென்னை
மாதுளம் பீசமுண் மாணரக் கின்னிறம்
போதுள்ளங் காண்பது போலமற் றென்றான்.

577 எட்டி னியன்ற விரண்டினு ளாங்கவை
யட்ட வரத்தமு மல்லது மாய்ப்பய
மாட்டார் மலர்க்கண்ணுஞ் செம்மையு மற்றுமா
விட்டமுங் காடம்டுவ னீங்கிது போல.

578 ஐந்தி னியன்றவர் பிண்டத்த ராகிய
மைந்த ரிருவர் குசலா குசலத்தர்
சிந்தையி னல்லவன் றன்வழித் தேவனும்
வெந்தொழி லான்வழி வீறி னரகனும்.

579 பீச மெனப்பட்ட தெட்டே பிறிதங் கொன்
றாசொன்று மில்லைய வைந்திற்கு மன்னது
நீ சொன்ன வாறிது நேருந் திறமென்னை
யேசுவன் கேள்யா னெடுத்தினி யென்றாள்.

580 அயலரக் கட்டக பீசமுண் டாங்கு
வியலகத் தைந்திற்கும் வேறொன்று காட்டாய்
குயலமு மல்லது மாயினன் றாகும்
மயல்படைத் தாயொழி மாதுளங் காட்டல்.

581 பூவின்கட் காட்டல் பொருந்தா ததன்வழி
மாவின்க ணாக மகன்செய் வினைப்பயன்
தேவன்கட் போலத் திருந்திய மாதுளஞ்
சாவின்கட் செய்கையுஞ் சாங்களைந் தாயோ.

582 வித்தொடு பூவின்கண் வேற்றுமை காட்டினும்
துத்தல் குழவி கிழவன்கட் சொல்லென்பன்
பித்துடை யார்போற் பிதற்றி வினைப்பய
மெத்திறத் தின்னு மியைத் துரைக் கில்லாய.

583 அங்குரந் தன்கண்ணுஞ் செல்லா தரக்கொடு
மங்கின பீசத் துருவ மலரின்கட்
டங்கின வென்னுஞ்சொற் றத்துவ மாக்கொண்ட
வங்குலி மாரனை யாதன்மற் றென்னாய்.

584 அப்படி யாலரக் காமது போன்மெனிற்
றப்படை யானுழப் பெய்வழித் தங்குத
றுப்புடை யான்சுர னாகிய வன்றுய்க்க
லிப்படி யாயினீ யென்றுரை யாயோ.

585 எம்மை யுவப்ப வினைவழித் துப்பெனின்
செம்மை வழியது தீஞ்சுவை யென்றில்லை
யெம்மை வினைவினை யாக்குநின் பூவுரை
யிம்மையோ டும்மை யிவையிலை யாலோ.

586 உண்டது போலு முறுபயன் பன்மலர்
கண்டது காரண மாகக் கருதினு
மண்டையா மான்றசை மீன்றடி தோன்றிய
வண்டுண வாகலு மாமத னாலே.

587 தீயுழப் பேசெயுந் தீவினை யென்பது
வாயுழப் பாம்வழி யேபுகுந் தாயினி
நோயுழப் பாகிய நுஞ்செய்கை யாவையும்
நீயுழப் பாய்பிறர்க் கேயுழந் தாயால்.

588 உள்ளம் வினையென வோதினை யேற்செய்கை
யெள்ளின் றுணையுமஃ தின்மை யினைந்தெனக்
கொள்ளுந் திறமென்னை கூறாய் குணந்தினிக்
கள்ளமல் லாலென்றுங் கட்டுரை யாயால்.

589 நின்னுடை யுள்ளமுஞ் செய்கையு மொன்றெனிற்
றன்னிடை யெய்துந் தரும தருமிமற்
றென்னிடைக் கொண்டிலை யெங்குப்பெற் றாயிது
முன்னுடம் பாட்டின் முரணுள தாமால்.

590 சித்தமுஞ் செய்கையும் வேறென்றி யேயெனி
லொத்த வினையுடன் பாடின்றி யாமினித்
துத்த லையாதின் வழித்தெனச் சொல்லுதி
யொத்திய வல்ல துரையலை யாயால்.

591 கண்டுணர்ந் தார்வத்தி னாற்செய்கை யாதலை
யுண்டெனி னாற்குண மொன்றினுக் கொட்டினை
பிண்டிநீ ழலவன் பேரறஞ் செர்தலிற்
கொண்டநின் கோளின்கட் குற்றமுண் டாமோ.

592 விளைவத னால்வினை யாக்குமென் பார்சொ
லுளைவதிங் கென்செய வோவுணர் வில்லாய்
தளைபெய்து வைத்தென்னைத் தம்பொறி யெல்லா
மளைவது நன்றிது தானற மாமேல்.

593 ஆர்வத்தி னால்வினை யாக்கு மெனச்சொல்லி
னார்வத்தைச் சித்தமென் றாருரைப் பாரினிச்
சேர்வித்த துப்பினிற் செய்கையு மாதலை
நேர்வித்த வாறது நீயறி யாயால்.

594 உணர்வினை ஆர்வ மெனவுரைப் பாயேற்
புணரும் பிறர்கடம் பொற்றொடி யார்மே
லுணர்வன்ற தார்வ முழப்பெனச் சொல்லி
னிணர்பிரி யாத்துப்பி னால்வினை யன்றாய்.

595 சித்திமுடைச் செய்கை செய்வினை யாதலின்
சித்த முடைத்துப்புஞ் செய்வினை யாம்பிற
சித்தம் வினையெனச் செப்புத லாலெங்குச்
சித்தமுண் டவ்வழிச் செய்கையு முண்டே.

596 செய்கையி னாற்றுப்பு மாக்கியத் துப்பினிற்
செய்கையு மாம்வகை செப்புவித் தேனினிப்
பொய்கைசெய் தேசொன்ன பூவொடு வித்துரை
வைகவென் றாண்மல ருண்கண் மடவாள்.

597 இருவகைப் பீசத் தியல்வு மழித்துத்
திருவகைத் தேவொடு பூவுஞ் சிதைத்தே
மருவுகை யாய்நின் மதுரஞ்செய் மாவும்
தருவனை யாயிற் றகரு மதுபோல்.

598 வலிசெய்து பீசத்தின் மாண்பு மழித்திட்
டலிசெய்து விட்டே னமையு மதன்மேற்
பலிசைமி னீசொல்லும் பாடங்க ளெல்லாம்
நலிவனொன் றொன்றா நடுவுணர்ந் தென்றாள்.

599 பிறந்தவப் பிண்டம் வினையினோ டாங்கே
யிறந்தன வெத்திறத் தின்னுமற் றென்றாற்
சிறந்தவத் தேவெய்திச் சேர்தலுஞ் சீரா
தறஞ்செய் தறானு மவம்பிற வன்றே.

600 உரந்தனை யாது மொடுக்ககி லாகிச்
சுரந்தபல் குற்றஞ் சொலக்கேட் டிருந்தான்
பரந்தினி நீசொன்ன பல்வழி யெல்லாங்
கரந்தனை போதலைக் காட்டுவன் கேணீ.

601 அரக்கொடு பீச மறக்கெட்ட வாற்றல்
கரப்பது போலிடைக் காண்பரி தாகி
மரத்திடை சென்று மலரின்கட் டோன்றிப்
பரக்குமென் றேன்பயம் பைந்தொடி யென்றான்.

602 அன்னணஞ் செய்தா னறங்கெட் டவன்வழித்
துன்னுஞ் சந்தானத் தொடர்ச்சி நிகழ்ச்சியிற்
பின்னை யதுபெறு மாதலின் யான்கண்ட
நன்னெறி நின்னா லறிவரி தென்றான்.

603 கந்தங்க ளெல்லாங் கடையறக் கெட்டக்க
ணந்தமி லாக்குற்ற மாமெனச் சொல்லுஞ்
சந்தங்க டம்முட் சவலைச் சந்தானமும்
வந்தஃ தெவன் செய்யும் வாமமாற் றென்றாள்.

604 ஆற்ற மகன்கெட்ட போழ்தே யமரிற்
றோற்றமு மென்னை துடித விமானத்து
ளேற்ற தவத்தவன் றேவென லென்கொல்
சாற்றுஞ்சந் தானத்தைச் சந்தித்துக் காட்டாய்.

605 மக்க ளுடம்பொடு தேவ ருடம்பிடை
மிக்க விடம்பெரு வெள்ளிடை யாலிது
புக்க தொடர்வில்லை யாதலி னீகொண்ட
பக்க முடன்கெடு மாலென்னை பாவம்.

606 புளிபொறி வாழ்நிழ றண்மதி யின்ன
தெளிவுள தாஞ்செல வின்முடி வென்னில்
விளிபவ னுளபொழு தேவினை துய்க்கு
மொளிகிளர் தேவ னுளமென்னு மாறோ.

607 சென்றில தேலிடை யற்றுழிக் தோன்றுக
வென்றலு மிங்குள தோவது தானெனி
னொன்றல பல்பொரு டாமொளி யாதிய
நின்றல வோவுல கெங்கும் நிறைந்தே.

608 தண்மதி கெட்டதன் சாயை யுடன்பெற
லுண்மை யுண்டாயினி னொத்துரை யொட்டுவன்
கண்மதி யாததெங் காரிய மேயின்ன
வெண்மதி யாயை விலக்குநர் யாரோ.

609 மதியென்று மில்லெனி னில்லொளி தானும்
புதியதும் பாழது பொன்றிய போழ்தே
கதியினை நாட்டிய காட்டி யெமக்கிங்
கதுவென்னை சொல்லிய வாறுரை யாத்தா.

610 அடியொடு பூவி னிடையற வின்றி
நெடியதோர் கொம்பினை நீமறந் தாயோ
மடியிலார் செய்த மானுயர் தெய்வப்
படியிது வென்றிடை பாழ்செய்திட் டாயால்.

611 தோற்ற மிடையற வில்லாத் தொடர்ச்சியைச்
சாற்றுதும் யாமுஞ்சந் தான மெனவென்னிற்
காற்றுஞ் சுடருங் கரகத்துட் டாரையு
மேற்றன வல்ல விரண்டுண்மை யாலே.

612 பித்தொடு கனவிடைப் பேயின் மயங்குநர்க்
கொத்த வுணர்வுண்மை யொட்டல தென்செய
தத்துவ மாயசந் தான முளதெனிற்
புத்தநின் சொற்கள் பொருளில வேயால்.

613 மூத்தல் வகையு முதலத னைம்மையு
மாத்த கணந்தோ றலர்ந்த நிகழ்ச்சியுஞ்
சாத்திரத் தாலத் தவிரன்கட் டாழ்ச்சியும்
போத்தந்து காட்டுந் திறமென்னை புத்தா.

614 கப்பம் பலபல கண்ணிமை யானுக்குத்
துப்பு முரைத்தென்னை தோன்றிய வக்கணத்
தொக்க விளைவுரைப் பாய்பின் வழிவழிச்
செப்புதி யேற்செய்கை சென்றுசென் றுண்டே.

615 காரண மென்னினுஞ் சென்றின்மை யாலில்லை
ஏரண தேவ விழுதைமை சொல்லுதி
யூருணி நீர்நிறை வுண்டோ யுறுபுனல்
வாரண வாய்க்கால் வரவில்லை யாக்கால்.

616 நில்லா தறக்கெடுந் தோன்றிற்றுந் தோற்றமு
மெல்லா வகையினு மில்லதற் கேலில்லை
சொல்லாய் தொடர்ச்சி தொடர்ச்சியென் றேநின்று
பல்லார் களையும் படுத்துண்ணும் பண்பா.

617 சுடருடைத் தோற்றத் தொடர்ச்சியைச் சொல்லி
யிடருடைத் தாக விவையிவை காட்டி
யடர்படுத் திட்டாட் கதற்கொன்று நாடிச்
சடருடை வாசனை சாதிக்க லுற்றான்.

618 கெட்டபி னாற்றல்க ளெல்லாம் வழியதற்
கொட்டு நறுமலர் வாசமோ டோட்டின்கட்
சுட்டுவ தொப்ப வெனச்சொல்லு நீகண்ட
விட்ட மிவற்றோ டியையல தென்றாள்.

619 முன்னைய துள்ள பொழுதத்து மற்றதன்
பின்னைய தில்லை யதுபெற்ற போழ்து
தன்னையு மில்லை யெனச்சொல்லின் வாசனை
யென்னை யியையுந் திறமிவை தானே.

620 ஓடு மலரு மொருங்குள வாதலிற்
கூடும் வாசமுங் குற்றமொன் றில்லெனிற்
கேடும் பிறப்பு முடனில்லை யாதலிற்
கூடல வென்பது கூறின மன்றே.

621 கெடுவத னுண்ணின்று தோன்றுவ தன்கண்
வடுவறச் செல்வது வாசனை யென்னப்
படுவதொன் றன்றுநின் பக்கத்தை யெல்லாஞ்
சுடுவதோர் கொள்ளி சுவடித்த வாறே.

622 போதின்க ணின்றும்புத் தோட்டிற் பொருந்திய
தாதின நாற்றந்தண் ணீருக்குச் சொல்லுதி
யோதன கந்த முடன்கெடின் வாசனை
யாதின தாகு மறிந்துரை யேழாய்.

623 வாசனை வாசனை யென்று வழிவழி
நீசொன்ன நீசொன்ன நேர்வதிங் கென்செய்ய
பாசன மாகிய பாதிரிப் பூவினைப்
பூசின தெப்பொருள் போத்தந்து காட்டாய்.

624 பூவின்கட் கேடும்புத் தோட்டின்கட் டோன்றியு
மேவிய வாசனை யெங்குமுண் டாமெனின்
சோபன மாகச் சுவாகதம் போந்ததென்
றேவன் றிருந்தடி சிந்திமற் றென்றாள்.

625 அதற்கு மறக்கே டுளதெனின் வாச
மதற்குமுண் டாயினி யெல்லையின் றோடு
மிதற்கெண்ணு மில்லெனி னில்லை யதற்கு
முதற்சொன்ன குற்றம் முடிந்தன வாமே.

626 சென்றதென் றாலதன் கேடின்மை யாஞ்செல
வின்றதென் றாலத னாற்றமு மில்லற்க
நன்றிதென் றேசொல்ல நல்லது நாமறிந்
தன்றிதென் றென்முனே யாருரைக் கிற்பார்.

627 கேடது தான்முழு தாதலி னீசொல்லும்
வீடது வாகலும் வேண்டும் விழுத்தவம்
கூடு பவர்க்குங் குணமில் லவர்க்கு
நீடல தேயுள தாநிரு வாணம்.

628 தோற்றம் வழியென்று சொல்லுத லாற்றட
மாற்ற மதுவிதன் மார்க்கத்து மாண்பெனச்
சாற்றுதி யேலுந் சவறது வாதலைத்
தேற்றுவன் கேணீ தெருண்டிருந் தென்றாள்

629 தன்வழித் தோற்றிக் கெடுமோ வதுகெடப்
பின்வழித் தோற்றம் பெறுமோ விரண்டனு
ளென்வழித் தோற்றமஃ தாமா றிருளற
நின்வழித் தோற்றத்தை நீயுரை யென்றாள்.

630 வழியொன்று தோற்றிக் கெடுமேன் மகப்பெற்
றழிகின் றவள்போ லணைவுள தாகு
மொழிகின்ற தேயது காணல தென்னிற்
கழிகின்ற கன்னிக்கோர் காதலற் காட்டாய்.

631 பிறப்பித்துக் கேடும்பின் றோற்றக் கெடலும்
இறப்பவுங் கூடா திருதிறத் தானுந்
துறப்பித்த வாறிது தூவெனக் கேட்டை
மறப்பித் துரைத்ததுண் டோசொல்லு வாம.

632 சுலாப்பல சொல்லிச் சுழன்று விடாதே
துலாத்தலைத் தூக்கமு மோக்கமுங் காட்டி
நிலாத்தலை யல்லா விரண்டு ளொன்றுண்டா
யிலாத்தலை யில்லே லமைவது மன்றே.

633 இல்லதற் கோயில்லை கேடென்னை காக்கையின்
பல்லதற் கோதார் பருமையு நுண்மையுஞ்
சொல்லிதற் காவதுண் டேலெனச் சொல்லின
ணல்லதற் கல்லது நாப்பெய ராதாள்.

634 துலாமில்லை யட்டக மேயது தானு
மிலாமிரு பாற்றலை யேதலை தாமு
நிலாம்வகை யில்லுயர் வோடிழி வெங்கும்
கலாமவை யாய்க்கடை கண்டது பாழே.

635 ஓல குளவி குருட்டெண் ணெய் வாணிச்சி
கோலஞ் சிதையுமென் றெண்ணெயட் டாளென்னும்
பாலகர் பாட்டுரை போன்றது மற்றுநின்
நூலுரை யெல்லா நுழைந்துணர் வார்க்கே.

636 கோற்றிர ளொன்றா யதன்றலைக் கேயுட
னாற்றியு மோக்கமு நாட்டினை யஃதொப்பத்
தோற்றமுங் கேடுந் தொகுபிண்ட மொன்றிற்குச்
சாற்றுதி யாய்விடிற் றக்கதென் னேனோ.

637 தலையன தாழ்ச்சியு மெழுச்சியு மன்றி
நிலையிலை கோலிடை நீக்கலு நீங்கு
மிலையென வெட்டி னிடுகுறி யொன்றெனிற்
பலவினி யிங்குப் படுவன கேணீ.

638 கோலுந் தலையு முடனில்லை யாமெனின்
மேலு முரைத்தன மேயதன் மேற்பழி
வாலுந் தலையு நடுவு மவையின்றிப்
பாலும் படுவதோ ராவுள தென்னாய்.

639 புணரிய தாமவை பொய்யெனச் சொன்னேற்
குணர்வதங் குண்மையு மொட்டுவை யாயிற்
குணகுணி யாயு மவயவி யாயும்
பிணபிணக் கெய்துமப் பேரிடர் செய்தாய்.

640 இருபிண்ட முப்பிண்ட மெண்ணில்பல் பிண்டம்
வருபிண்ட மேற்பல மற்றவை நீங்க
வொருபிண்டங் கொண்டாங் குயிர்க்குறுதி யிட்டுத்
திருவுண்ட செய்கையிற் செய்தவ னாக.

641 வினைசெய்தான் றுய்க்குமோ வேறொருவ னேயோ
வனைவரு மோவில்லை யோசொல்லா யோவென்னக்
கனைகடலி னுண்மணலிற் கண்ணினையு மீந்தா
னினைவகைய கேளென் றெடுத்துரைக்க லுற்றான்.

642 அவனேயு மென்னேன் பிறனேயு மென்னே
னவனும் பிறனு மவரேயு மென்னே
னெவனேயு மெய்தா னெனலேயு மாகா
வெவனோ விதுதுய்ப்பா னின்னணங்கே ளென்றான்.

643 அதுவேயு மென்னேன் பிறிதேயு மென்னேன்
அதுவும் பிறிது மவையேயு மென்னேன்
அதுபோன்ற வல்ல ததன்வழியின் மற்றொன்
றிதுபோல வென்பே னெடுத்துரையுங் கேணீ.

644 இடுபீச மன்றா லிறுங்காதி யன்றால்
வடுவாய வவ்விரண்டும் வந்தனவு மன்றால்
நெடிதாய தீங்கரும்பு நெல்லுமே போல
நடுவாக நோக்காய் நறுநுதலா யென்ன.

645 ஆத்தாவ தன்றேற் பிறிதா மரும்பெற
னாத்தான் வருத்த நீ நாட்டியதியாங் காணேன்
போத்தாகா தேற்குதிரை பெட்டையது போலென்
சாத்தாகு மாகாமை சாதிக்க வல்லையோ.

646 அவன்போற லானு மவனன்மை யானு
மவன்றன் வழியா னவனாத லானு
மவன்றான் பிறனே யவனென்ற லானு
மவன்றான் பிறனே யெனவழிவ துண்டோ.

647 கண்போலக் கயலெனினுங்
காடன்றித் தூறெனினும்
பெண்பாலாற் பல்கியும்
எல்லாம் பிறவேயாம்.

648 அயலானே துய்க்கு மவன்றுவ்வா னென்பாய்
முயலானு மில்லான் முகஞ்சிறிதே யொப்பான்
வயலாமை போல்வதோர் மக்குளி யிலானென்
றியலா தனவே யெடுத்துரைத்தி யென்றாள்.

649 அயற்பிறனு மல்ல னவன்றானு மல்லன்
புயற்றிறலைங் கூந்த லிதன்போலப் பிறனுக்கேல்
முயற்பிறவி மேயினீர் முன்செய்தா னங்கோர்
பயப்பெறுவ தில்லையேற் பாழ்பயனி தென்னோ.

650 தற்பிறிதே யாகிப் பிறபிறிது தானல்லா
நெற்பிறிது போன்மெனவு நீயுரைத்தா யஃதொழிந்து
சொற்பிறிது சொன்னாய் சுவர்க்கத் தவர்க்குரைப்
பிற்பிறனே யாகிப் பெறப்பிறனே யாகானோ.

651 நெல்லின் வழிக்கரும்பு நீள்கரும்பி னானெல்லுஞ்
சொல்லுநீ சொல்லாயேற் சொல்லியநின் சொல்லெய்தா
வல்லனாய்ச் செய்த மகன்வழியி னான்மகன்றா
னல்லனாய்ச் சொல்லின் னுலங்கரு வாமே.

652 செய்தானுஞ் செய்தானே துப்பானுந் துப்பானே
யிஃதாலென் மெய்ம்மை கிடந்தவா றென்றானுக்
கெய்தார் பிறவோ விருசார் வினைப்பயனுஞ்
செய்தார்க டாமெனலுஞ் சிந்தித் திருந்தானால்

653 கண்ணுந் தலையும் பிறவுங் கருந்தடியும்
பெண்ணுங் கொடுத்துப் பிறர்க்கே யுழந்தாய்முன்
னெண்ணுங்கா லின்னுநீ யெவ்வினையுஞ் செய்தாரை
யுண்ணுந் திறமொன்று மோதா தொழிந்தாயோ.

654 எனைத்துணையு நீவருந்தி யெத்துணையோர் கால
நினைத்திருப்பி னல்லது நின்காட்சி தன்னால்
வினைப்பயத்தின் கூட்டம் விரித்துரைப்ப னென்னிற்
றினைத்துணையு மாகாமை தேரிதுநீ யென்றாள்.

655 முழுக்கேடு வேண்டாயேன் முன்னின்ற துண்டாம்
வழுக்குமே லவ்வுரைக்கு மாறுகோ ளிஃதா
மிழுக்காமை புத்தீ ரெனைப்பலருங் கூடிக்
குழுக்களாய் வந்துநுங் கோளிறுமி னென்றாள்.

656 நின்றே நிலையுமெனி னித்தியமே யாயொழியு
மன்றேயஃ தாமி லநித்தியமா மவ்விரண்டு
மென்றே யுரைக்கி லிருவழிக் குற்றமுமா
மென்றே யுரைக்கின்றா யேகாந்த னாகுதியோ.

657 உச்சேதந் தானு மொருவகையா லவ்வகையே
யச்சேத மின்மையு மவ்விரண்டு மாய்நிகழ்ந்து
பொய்ச்சேத மல்லாப் பொருண் முடிபொன் றுண்டாக
மெச்சாயே நீயெனயான் மெச்சுவனே யென்றாள.

658 இறைவன்ற னூலுணரி னெவ்வுருவி னாரு
முறையினா லெய்துவர்தா முன்னிய வீடென்றாள்
மறையினா லாயினு மற்றொருவா றேனு
நிறையினாற் செல்லென்று நேரிழையுஞ் சென்றாள்.

## உரை

புத்த சமயத்தைத் தோற்றுவித்த முதல்வரான புத்தபிரான் கடற்கரையோரமுள்ள கபிலபுரத்தில் வாழ்ந்து வந்தார். (உணவுக்கு மீன் எளிதில் கிடைப்பதற்காகப் புத்தர்கள் கடற்கரையோரமே மடங்கள் அமைப்பர் என்று இங்கு ஏளனமாகக் குறிப்பிடப்படுகிறது. ஊன் விலைஞரும் உயிர்கொலைஞரும் அடுத்துத் தொழிலிடங் கொண்டிருந்தனர் என்பது குறிக்கப்படுகிறது). அவர் அரசர் மரபினராயிருந்ததற்கேற்ப, அவர் தங்கிய மடம் அரண்மனைக் கொப்பானதாகவேயிருந்தது. அவர் ஓர் உயர்ந்த தவிசின் மீதமர்ந்து, தம்மைப் புடைசூழ்ந்திருந்த தம் திருச்சபை மாணவருக்குப் புத்தநெறியை விளக்கிக் கொண்டிருந்த சமயம், நீலகேசி அவரைச் சென்று கண்டாள். நீலகேசி விருப்பத்திற்கிணங்கப் புத்தபிரான் தம் நெறியின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கினார்.

புத்தர்பிரான் : மெய்ம்மையின் அடிப்படைத் தத்துவங்கள் ஐந்து கந்தங்களாக வகுக்கப்படும். அவை உருவ கந்தம் (மூபம்) உணர்ச்சிக்கந்தம் (வேதனை) அறிவுக்கந்தம் (விஞ்ஞானம்) பெயர்க்கந்தம் (சம் ஞா) செயற்கந்தம் (சம காரம்) என்பவை.

உலகின் பொருள்கள் அனைத்தும் உருவகந்தத்தைச் சார்ந்தவை. அப்பொருள்கள் எட்டினங்களாக (அ டகம்) அறியப்படும். அவையாவன: மண், நீர், காற்று, அனல் ஆகிய மூலப்பொருள் (பூதங்)களும் அவற்றுக்குச் சரியான பொறியுணர்ச்சிகளாகிய நிறம், சுவை, மணம், ஊறு ஆகியவைகளும் ஆம். இவை ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாத ஒரே தொகுதியாக எட்டினம் எனப்படும். மூலப்பொருள்களின் பண்புகள் முறையே திட்பம், நெகிழ்ச்சி, வெப்பம், சுழற்சி ஆகியவை. அவற்றின் செயலும் நால் வகைப்படும்.

உணர்ச்சிக்கந்தம் இன்ப உணர்ச்சி, துன்ப உணர்ச்சி, சமனுணர்ச்சி என மூவகைப்படும். அறிவுக்கந்தம், பொறி அறிவு ஐந்து, மன அறிவு ஒன்று, ஆக ஆறு அறிவுகளையும் பகுதிகளாகவுடையது. பெயர்க்கந்தமும் இதேபோல ஆறு வகை. செயற்கந்தம் மனமொழி மெய் என மூவகை.

இக்கந்தங்கள் கணந்தோறும் தோன்றி மறைவன. (பல தனிப்படங்கள் விரைவாக ஓடித் திரைக் காட்சியில் தொடர்ச்சி காட்டுவதுபோல) அவை தொடர்ச்சியுடையவைபோலத் தோற்றுதல் மயக்கமே. உண்மையில் எல்லாப் பொருள்களும் நிலையற்றனவே.

ஐந்து கந்தங்களின் சேர்க்கையையே ஆன்மா என்பதன்றி, ஆன்மா அல்லது உயிர் என்ற ஒன்றில்லை. கண வாழ்வும் அழிவுத் தன்மையுமுடைய இக்கந்தங்கள் நிலையாமை, துன்பம், தூய்மையின்மை, உயிர்ப்பின்மை (அனாத்மா) ஆகிய இயல்புகளை உடையன. இவற்றின் இயல்பை உணர்ந்தவன் உலகத்தோற்ற (சம்சார)த்தின் தன்மை உணர்ந்து துறக்கம் அல்லது வீடு (நிர்வாணம் அல்லது மோ ம்) அடைகிறான்.

நீலகேசி : ஐந்து விரல்கள் சேர்ந்த கைபோலும், செங்கல் முதலிய பொருள்கள் சேர்ந்தமைந்த வீடுபோலும் கந்தங்கள் சேர்ந்ததே மெய்ம்மை (உலகு) என்கிறீர்கள். ஆனால் கந்தங்கள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க ஒண்ணாதவை; ஒருங்கே கணந்தோறும் தோன்றிக் கணந்தோறும் அழிபவை என்று கூறுகிறீர்கள். விரல்கள், வீட்டுக்கான பொருள்கள், இவ்வகையில் பொருத்தமான உவமைகள் அல்ல. ஏனெனில் அவை தனித்தனி இயங்கவோ தோன்றவோ அழியவோ கூடும். கந்தங்கள் கூட்டாகவோ இயங்குவதற்கும் அழிவதற்கும் அவற்றைப் பிணைக்கும் அடிப்படை இணைப்பு இன்றியமையாதது. இதனை ஏற்றால், ஆன்மாவை ஏற்றதாகும். இக்கந்தங்கள் அத்தகைய ஆன்மாவின் பண்புகளேயாகும்.

நாலு முதற்பொருளைக் கூறுகையில் அவற்றின் பண்பும் செயலும் குறித்தீர்கள். பொருளினின்று வேறாகப் பண்பும் செயலும் பொருளாவது எங்ஙனம்? பிற கந்தகங்களையும் பிரித்தறிய அறிவு வேண்டும். பொறியுணர்விற்கு அடிப்படையான மண்ணை ஏற்கும்போது, உணர்ச்சி முதலிய கந்தங்களுக்கு அடிப்படையான உயிரை (ஆன்மாவை) ஏற்காததேன்?

புத்தர் : நாங்கள் ஏற்பதெல்லாமே பண்புகள்தான்; பொருள்கள் அல்ல.

நீலகேசி : அப்படியானால் பண்புகளே பொருள்களாயின. அவற்றின் செயல்கள் பண்புகளாகும். பொருள் பண்பு உறவு ஏற்பட்டுவிடுகிறது. நீங்களோ அத்தகைய உறவை ஏற்பதில்லை.

புத்தர் : பண்புகளல்லாது பிண்பி (பொருள்) ஒன்றிருப்பதாகக் கொள்வதேன்? அதனை அறியமுடியுமா?

நீலகேசி : பிரிந்தியங்களோ பிரித்துணரப்படவோ முடியாத காரணத்தால் பொருளில்லை என்றாக முடியாது. உணர்ச்சி முதலிய கந்தங்களின் அடிப்படையாக உயிர் நிலை அல்லது அறிவுநிலை (போதம்) இருக்கவேண்டுவது விலக்க முடியாத உண்மை.

மேலும் கந்தங்கள் பிரிந்தியங்காதென்றால், ஒன்றுக்கொன்று மாறான தீ, நீர், ஆகியவை ஒருங்கே இயங்கம் என்ற முரண்பாடு ஏற்படுகிறது.

ஒவ்வொரு மூலப்பொருளிலும் மற்ற மூன்றும் கலந்துள்ளன என்கிறீர்கள். அப்படியானால் அக்கலவை மூலப்பொருளிலும் அத்தகைய கலப்பு இருக்கவேண்டும். அக்கலப்பிற் கலந்துள்ள கலப்பிலும் அதனுட் கலப்பிலும் அவ்வாறாகி எல்லையற்ற குழப்பநிலை ஏற்படுகிறது. மூலப்பொருள் என்பதற்குப் பொருளே இல்லாமலாகிறது.

புத்தர் : அப்படி அன்று. ஒவ்வொரு மூலப் பொருளிலும் தன் பண்பு மிகுந்து, பிற பண்புகள் குறைந்து இயல்கின்றன.

நீலகேசி : மிகுதிப் பண்புக்குமுன் குறைந்த பண்பு அழியும். அப்படியும் அவை ஒத்தியங்குதல் அரிது. மேலும் பொறியாலுணரப்படும் எட்டினப் பொருள்கள் அங்ஙனம் உணரப்படாதவற்றுடன் இயங்குவதெவ்வாறு? தவளையின் காற்சுவடு காற்றில் இருப்பது போலன்றோ இந்நிலை? அறிவு செயலுக்கும், செயல் இன்ப துன்பங்களுக்கு இடமாகும் என்கிறீர்கள். அறிபவன், செய்பவன், நுகர்பவன் ஆகிய ஆன்மா இல்லை என்கிறீர்கள். அப்படியானால் இம்மூன்றும் தொடர்பற்றவையாகவன்றோ இருக்க வேண்டும். ஒன்று மற்றதற் கிடமாவது எவ்வாறு? அறிவுக் கந்தம்ம ஆறனுள் ஒரே நேரத்தில் ஒன்று தானே உணர்விலிருத்தல் கூடும்? மற்றவை மறைவிலுள்ளனம என்னின், மறைவில் வைத்துள்ள உள்ளம் அல்லது ஆன்மாம ஒன்றும இருத்தல் வேண்டுமன்றோ?

அறிவுக்குக் காரணம் விருப்பம் (இச்சை) என்கிறீர்கள். விருப்பம் அறிவுக்கும முந்தியதாகவே அது எங்கிருந்து எழுகிறது என்ற வினா ஏற்படுகிறது. உடலிலிருந்து என்றால் அறியாப் பொருளி (அசேதனத்தி)லிருந்து வந்த தென்றாகிறது. அது அறிவினின்று எழுந்ததாயின் காரியமே காரணமாகின்றது. இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக உள்ளுறை அறிவும என்ற ஒன்றைக் கொள்கிறீர்கள். ஆனால் அது ஆன்மாவிற்கு ஒரு மறுபெயரேயன்றி வேறன்று. புத்தக் கோட்பாட்டின்படி பொறியுணர்ச்சிகளுள் மணம், சுவை, ஊறு மூன்றும் பொறிகள்மீதுபொருளுலகு தாக்குவதால் ஏற்படுகின்றன என்பது ஒத்துக்கொள்ளப்படுகிறது. நீலகேசி ஓசையும் அத்தகைய தாக்குதலாலேயே ஏற்படுகிறது. என்றும விளக்கினாள். (இது தற்கால அறிவியல் கொள்கையை வியத்தகு முறையில் நினைப்பூமட்டுவதாகும்) ஓசை காற்றணுக்களினியக்கத்தால் உண்டாவதென்றும் அது ஒளியினும் வேகம் குறைந்ததென்றும் கூறி, அதனை எடுத்துக்காட்டினால் விளக்குகிறாள். வண்ணான் துணி தப்பும்போது அவன் செயலைக் கண்கொண்டு பார்ப்பவருக்கு அச்செயலைப் பார்த்தபின் சிலநொடிகள் கழித்தே அதனுடன் ஏற்படும் ஓசை செவிபிற்படும். மேலும் கட்புலனுதவியின்றியே ஓசையின் அண்மை தொலைவுகளையும் வரும் திசையையும் உய்த்துணரலாகும்.

நொடிக் கோட்பாட்டின் முரண்பாட்டையும் நீலகேசி நன்கு விளக்கினாள். நொடிதோறும் பொருள்கள் அழிந்து மாறுவதானால் புத்தர் என்ற பெயரைச் சொல்வதற்குள் பல நொடிகள் ஆகி, ஒரு நொடியில் கேட்ட உணர்வு அழிந்து, பின் மறுநொடி உணர்வு ஏற்படும. தொடர்ச்சியுமிராது, தொகையாகக் கேட்ட கேள்வியுணர்வுமிருக்க முடியாது என்று அவள் காட்டினாள்.

நீலகேசி : ஓசை என்பது பொருளன்று; போலித் தோற்றம் என்கிறீர்கள். ஓசைகளால் ஏற்பட்ட உங்கள் பிடக முதலிய நூல்களும், ஓசை வாயிலாகச் செய்யப்படும் உங்கள் அறிவுரைகளும் என்னாவது!

அறிவுக் கந்தமும் பெயர்க்கந்தமும் ஒரேவகைப் பொருள் குறிக்கின்றன. இரண்டுக்கும் புலனாவது ஒரு பொருளாயின், அவை இரு பொருள்கள் ஆகா. ஒரு பொருளாயின் அறிவுக் கந்தம் பொருளற்றதாகிறது.

செயற் கந்தத்தில், அவா, வெகுளி, மயக்கம் ஆகியம மனத்தின் செயல்களும், பொய், குறளை, இன்னாச்சொல், பயனில் சொல் ஆகிய மொழியின் செயல்களும், கொலை, களவு, காமம் ஆகிய உடற் செயல்களும் கூறப்படுகின்றன. இப் பத்துத் தீமைகளுள் குடியும் பேரவாவும் இடம்பெறாதது ஏன்? மேலும் அவா தீமையாகுமானால், புத்த துறவியர் குடை, மிதியடி, குண்டிகை ஆகியவை வைத்துக்கொள்ளல தகாதன்றோ? மெய்யறிவுடன் நோக்கினால் அவவாவனைத்துமே தீமை என்று கூறுவதற்கில்லை. அது நன்மையாவதும் தீமையாவதும் அவாவிய பொருளின் தன்மையை மட்டுமே பொருத்தது. வெகுளியோடு எவ்வகையிலும் ஒப்பாகும் செருக்கு, மயக்கம் (மாயை), சிறுமை (லோபம்) ஆகியவற்றையும் தீமைகளாக எண்ணத் தவறிவிட்டீர்கள். உம் வாழ்க்கை வரலாற்றிலேயே இத் தீமைகளை அகற்றப் பாடுபட்டிருந்தும், உங்கள் சமயக் கோட்பாட்டில் இவற்றைக் கவனிக்காது விட்டுவிட்டீர்கள். மொழிச் செயல்களிலும் தீமை பயக்கும் மெய்ம்மை, புறங்கூறாது நேரிடையில் இழித்துரைத்தல், ஆகியவற்றை நீங்கள் ஒதுக்கத் தவறிவிட்டீர்கள். மேலும் தீமைகளை மன மொழி மெய் என முற்றிலும் பிரித்ததும் வழுவாகும். எல்லாத்தீமைகளிலும மனத்தின் செயல் உண்டு என்பது தெளிவாக்கப் படவில்லை.

கொலைக் குற்றத்திற்கு ஐந்து கூறுகள் தெளிவுபட வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். செயலுக்காளானது உயிருடைய பொருளாயிருக்க வேண்டும்; உயிருடைய தெனச் செய்பவர் அறிந்திருக்க வேண்டும். கொல்லும் எண்ணம், கொலைச் செயல், ஆளான உயிர் இறத்தல் இத்தனையும் இருத்தல் வேண்டும். இவ்வைந்தில் எக்கூறு குறைபாட்டிலும்ம கொலைக் குற்றம் இல்லை என்கிறீர்கள். எனவே, நடைமுறையில் வெற்றிபெறாத கொலை முயற்சிகூடக் கொலையாகாது என்மறாகிறது. ஆனால் உங்கள் நூமலில் காந்திபாலன் ( ாந்திபாலன்) என்ற துறவியைக் கொல்லமுயன்ற மன்னன் கலாகன் (கலா ன்) நரகு மசென்றதாகக் கூறப்படுவானேன்?

உங்கள் பேரறவுரை (மகாவாக்கியம்) நான்கனுள், எல்லாமே துன்பம் (சர்வம் துக்கம்); எல்லாமே தூய்மையற்றவை (சர்வம் அசுசி); எல்லாம் நிலையாதவை (சர்வம் அநித்யம்); எல்லாம் உயிரல்லாதவை (சர்வம் அனாத்மா) என்ற நான்கு உண்மைகள் கூறப்படுகின்றன. முதல் உரையின்படி நீங்கள் வற்புறுமத்தும் நல்லறமும் நற்பயன் அற்றதாகும். இரண்டாவதன்படி உங்கள் மறை, போதிமரத்தடி முதலியவையும் தூய்மையற்றவையாக வேண்டும். மூன்றாவது வாழ்க்கைக் கொவ்வாதது. நொடிதோறும் எல்லாம் அழிவது உண்மையானால், அரசன் உடமைகளைப் பறிமுல் செய்யும்போதோ, வெள்ளம் முமதலியவற்றால் அழியும்போதோ, வருந்துபவர் நொடிதோறும் வருந்தாததேன்? மேலும் சமயத் தலைவராகிய நீங்களும் மறையும் நிலைப்பதெவ்வாறு? கடைசி உரைக்கு மாறாக நீங்களே உயிர், மறுபிறப்புப் பற்றிப் பேசுகிறீர்கள். அது வெறும் உலகியல் வழக்கு (வியவகாரப் பிரயோகம்) ஆனால்கூட உங்கள் பழைய நினைவுத் தொடர்ச்சி (பிரத்தி பி ஞை)க் கொள்கையுடன் அது ஒத்துவாராது

மெய்ப் பொருள்களை, நாம் அவற்றின் பெயர் (நாமம்) உருவம் ( தாபனம்) பொருண்மை (திரவியம்) செயல்வகை (பாவம்) ஆகிய நாலு வகைகளால் அறியலாம். நீங்கள் கடைசிவகை ஒன்று மட்டுமே ஒப்புக்கொள்கிறீர்கள். முதல் மூன்றுவகைகளாலும் மட்டுமே ஆன்மா தெளியப்படும். வான்மலர் போன்ற தொடர்கள் இல்பொருள் குறிக்கின்றனவே எனின், வான், மலர் என்ற இரண்டும் உள்பொருள்களே என்றும், இல்பொருள் என்பது தொடரின் முரண்பாடு என்றும்ம காட்டலாம். பொருள் குறித்தே பெயர் எழுமாதலால், பெயர் பொருளின் அறிகுறியேயாகும்.

வினைப்பயன், வினையுலகு (சம்சாரம்) வீடுபேறு ஆகியவற்றை ஏற்கும் புத்தநெறியாளர் இவற்றுக்கு அடிப்படைமயான உயிர்நிலை (ஆன்மா) உண்டென்பதை மறுப்பது பொருத்தமற்றது என நீலகேசி கூற, அதை மறுக்கப் புத்தர்பிரான் கூறிய உவமைகள் பலவற்றுள்ம பொருத்தமின்மையை அவள் விளக்கிக் காட்டினாள். மேலும் வீடுபேறு என்பது வினை உலகுத் தொடர்பு அறுவதேயாயின், நொடிதோறும் அழிந்து புதிதாகும் உலகில், வீடுபேறுதான் நொடிதோறும் நிகழும் செய்தியாயிற்றே என்று நீலகேசி ஏளனம் செய்தாள். நொடி மாற்றுக்கொள்கையும் மாறுதலின் கொள்கையும் தவறு என்றும், உள்ளார்ந்த நிலைமையுமாகிய தொடர்ச்சியினிடையே மாற்றமாகிய நடுநிலைக் கொள்கையே நேர்மையுடையதென்றும் அவள் விளக்கினாள்.

நீலகேசி அறிவின் திறத்தைக் கண்டு வியந்து, புத்தருடைய குறைபாட்டை ஒப்புக்கொண்டு, இனி அவள் கூறிய உண்மைகளை ஏற்பதாகக் கூறினார்.